# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## சித்திரக்கலை – 2019

தரம் 10 | இரண்டாந்தவணை | நேரம்: 1 மணித்தியாலம்

### பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலே விடை எழுதுக.**
- **கீழே தரப்பட்ட ஒளிப்படத்தை பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளியை நிரப்புக**



1. கம்பளைக் காலத்தில் அமைக்கப்பட்ட ……………………………………….. என்னும் சிற்பமாகும்.

2. IIIஆம் விக்கிரமபாகு மன்னன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ……………… தேவாலயம் கண்டி மாவட்டத்தில் உடுநுவர பகுதியில் அமைந்துள்ளது.

3. கதிர்காமம் செல்லும் யாத்திரியர்களுக்காக ……………………………………. என்ற சிற்பி உட்பட அவரது சீடர்களால் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

4. இங்குள்ள செதுக்கல்கள் வேங்கை, சித்திரவேம்பு பலகையில் ………………………….. முறையில் செதுக்கப்பட்டுள்ளது.

5. கூரையில் 26 கை மரங்கள் ஒரு பலகை ஆணியுடன் பொருத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது …………………………… என்று அழைக்கப்படுகின்றது.

- **6 தொடக்கம் 10 வரையான வினாக்களிற்கு சுருக்கமான விடை தருக.**

6. சமகால அனுபவங்களையும், பொருள்களையும் சித்தரிக்கின்ற மாரனைத் தோற்கடித்தல் என்னும் ஓவியத்தில் மாறனின் கையில் ஏந்திய ஆயுதம் எது?......................................................

kalvi.lk

7. “ஹேர்மிஸ் டயொனீசிஸ்” என்னும் கிரேக்க சிற்பத்தில் வலது கை உடைத்து போயுள்ளதோடு, அக்கையில் இருந்திருக்கக்கூடும் என ஆய்வாளர்கள் கூறும் பொருள் எது? .................................................................................................................................

8. கண்டிநகர்க்கால ஓவியங்களில் பின்னணியாக அதிகம் பயன்படுத்தப்பட்ட வர்ணம் எது?.................................................................................................................................

9. பிரமிட்களின் முன்னால் அமைக்கப்படும் பரோவா மன்னர்களின் கீர்த்தியையும், வலிமையையும் எடுத்துக்காட்டும் வகையில அமைக்கப்பட்ட பிரமாண்ட சிற்பம் எது?

.................................................................................................................................

10. கிரேக்கத்தில் பெண் தெய்வமான அதீனா தேவதையின் ஊடகம் யாது?

.................................................................................................................................

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட விடைகளில் சரியானதை தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.**

11. இலங்காதிலக விகாரையை அமைத்த கலைஞர்,
   (1) ஸ்தபதிராயர் (2) தெல்மட மூலாச்சாரியார்
   (3) கணேஸ்வராச்சாரியார் (4) தெய்வேந்திர மூலாச்சாரியார்

12. மொனாலிஸா என்ற பிரதிமை ஓவியம் வரையப்பட்ட ஊடகம்,
   (1) கன்வஸ் (2) சுவர்
   (3) பொப்ளர் மரப்பலகை (4) விதானம்

13. மைரனால் அமைக்கப்பட்ட ‘பரிதி வட்டம் வீசுபவன்’ என்ற சிற்பத்தின் காலப்பகுதி
   (1) உரோமம் (2) கிரேக்கம்
   (3) எகிப்து (4) சிந்துவெளி

14. மடோனா ஓவியங்களை வரைவதில் புகழ்பெற்றவர்,
   (1) மோனாலிசா (2) மைக்கல் அஞ்சலோ (3) டாவின்சி (4) ர.ஃபேயல் சென்சியோ

15. கண்டிநகர்கால ஓவியங்கள் சிறப்பாக காணப்படும் விகாரை,
   (1) கிரிவிகாரை (2) தெகல்தொறுவ (3) தூபாராம (4) எம்பக்கே

Education கல்வி அධ්‍යාපන

- 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட ஒளிப்படங்களுடன் நெருங்கிய தொடர்பினைக் காட்டும் உருவை எதிரிலுள்ள **A,B,C,D,E** ஆகிய உருக்களிலிருந்து தெரிவு செய்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16..  ........................  A

17.  ........................  B

18.  ........................  C

19.  ........................  D

20.  ........................  E

Education கல்வி

- **21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிகளில் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.**

21. சிலுவையில் மரணித்துக் காணப்பட்ட யேசுபிரானின் உயிரற்ற உடலை அன்னை மரியாள் மடியில் வைத்திருக்கும் சிற்பம் ............................ என அழைக்கப்படுகின்றது.

22. 4ஆம் புவனேகபாகு மன்னன் காலத்தில் சேனாதிலங்கார அமைச்சரின் தலைமையில் சத்தர்மதிலக எனும் கடலாதெனிய விகாரை ................. ஊடகத்தால் நிர்மாணிக்கப்பட்டது.

23. தலதா மாளிகையின் பத்திரிப்புவ (எண்கோண) மண்டபத்தினை அமைத்தவர் ....................................................... என்ற தென்னிந்திய சிற்பியாவார்.

24. வகுப்பறையில் சிற்பங்களை அமைப்பதற்கு இலகுவான ஊடகம் ..................... ஆகும்.

25. கைகளிரண்டும் உடைந்து போயுள்ள ................................. சலவைக்கற்சிற்பம் கி.பி. 1820 இல் மெலோ தீவில் கண்டுபிடிக்கப்பட்டது.

- **26 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் எழுதுக.**

26. ஹைரோகிளிப்ஸ் :..........................................................................................................

27. லிதோ அச்சுப்பதிப்பு:..........................................................................................................

28. ஸ்கிறைப்(எழுதுபவர்):..........................................................................................................

29. தொடர்கதை ஓவியம்: ..........................................................................................................

30. சலவைக்கல் :..........................................................................................................

- **31 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு F,G,H,I,J ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையினை எழுதுக.**


F


G


H


I


J

31. F எழுத்தினால் காட்டப்படும் சிற்பத்தின் ஊடகம்? ..............................................................................

32. G எழுத்தினால் சலவைக்கல் ஊடகத்தில் முழுப் புடைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ள இச்சிலையை உருவாக்கியவர் யார்?

..........................................................................................................................................................

33. H எழுத்தினால் திறந்த கண்கள், அலை மடிப்புக் கொண்ட காவியுடை ஆகியன மூலம் புத்தர்பெருமானின் ஆன்மீகப் பண்புகளைவிட, புற இயல்புகளை வெளிக்காட்டுவதில் வெற்றிகண்டுள்ள யுகம் எது?.........................................................................................................


34. I எழுத்தினால் குறிக்கப்படும் சிற்பம் வெளிப்படுத்தும் உணர்வுநிலை யாது?

..........................................................................................................................................................

35. J எழுத்தினால் குறிக்கப்படும் தூண்கள் மீது அமைக்கப்பட்ட விகாரை எவ்வாறு அழைக்கப்படுகிறது.?

..........................................................................................................................................................

- **இங்கு காணப்படும் சித்திரத்தினை இனங்கண்டு அதன் கலைப்பண்புகளை பகுப்பாய்வு செய்யும் வகையில் 36 தொடக்கம் 40 வரையான உபதலைப்புகளுக்கு பொருளுள்ள ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**



36. இனங்காணல் :..................................................................................................................

37. வரைந்த கலைஞர் :..................................................................................................................

38. காணப்படும் இடம் :..................................................................................................................

39. வர்ணப்பயன்பாடு :..................................................................................................................

..................................................................................................................

40. ஒழுங்கமைப்பு :..................................................................................................................

..................................................................................................................

(40 X 1 =40 புள்ளிகள் )

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சித்திரக்கலை – 2019**

**தரம் 10** **இரண்டாந்தவணை** **நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**பகுதி – II**

**முக்கியம்::-**

- விடைத்தாள் பின்பக்கத்தில் இடதுபக்க மேல்மூலையில் உங்கள் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதல் தாள் உலர்ந்திருக்க வேண்டும்.

சுயாதீன ரேகைச் சித்திரம் வரைதல்

- உங்களுக்கு முன்னாலுள்ள பொருள்களை அவதானிக்குக.
    1. பருமட்டான தாளைப் பயன்படுத்தி பூர்வாங்க பரும்படிப்படத்தை வரைக.
    2. நீங்கள் காணும் விதத்தில் பொருள்களை வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்கு வெள்ளை வரைதற் தாளைப் பயன்படுத்துக.
- இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளர்களிடம் ஒப்படைக்குக.
- உங்கள் வரைதலை மதப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்பதைக் கவத்தில் கொள்க.
    - சுயாதீன ரேகை கற்கை :-
        1. பரும்படியான தாளிலுள்ள பூர்வாங்க பரும்படிப் படத்தில் உரிய ஊடகத்தைக் கையாளும் உங்கள் திறன்
    - வர்ணச் சித்திரம் :-
        2. தளத்துக்கு உதந்ததாக கலைநுட்பத்துடன் பொருட்கள் தொகுக்கப்பட்டிருத்தல்
        3. அளவிடைகள் , தூரநோக்கு , முப்பரிமாண விளைவு பற்றிய உமது விளக்கம்
        4. தரப்பட்டுள்ள பொருள்களின் பண்புகளை எடுத்துக் காட்டல்
        5. வர்ண ஊடகங்களை கையாளும் திறன்
        6. ஒட்டு மொத்த நேர்த்தியும் பொருத்தமான பின்னணியும்

**மிகமுக்கியம்** :

பொருள்களின் தொகுயை வைத்துள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருள்களின் தொகுதிக்குப் பொருந்தும் முறையில் சீராக மாற்றி வரைவதற்கு உங்களிற்கு சுதந்திரம் உண்டு.

(30புள்ளிகள்)

kalvi.lk

## மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
**சித்திரக்கலை – 2019**

**தரம் 10** **இரண்டாந்தவணை** **நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**பகுதி – II**

**ஆசிரியர்களுக்கு மட்டும் பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக**



**தேவையான பொருட்கள்**

1. அகராதி அல்லது பெரியதடித்த புத்தகம்
2. பப்பாளிப்பழம் அல்லது உரித்ததேங்காய்
3. நீர் அரைவாசிக்கு நிறைந்த போத்தல்
4. சீத்தைத்துணி
5. குறோட்டன் கிளை

kalvi.lk

## மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
### சித்திரக்கலை – 2019

தரம் 10 இரண்டாந்தவணை நேரம்: 2 மணித்தியாலங்கள்

### பகுதி – III

**கவனிக்க:**

பின்வரும் ஊடகங்களுள் எவற்றையேனும் பயன்படுத்துவதற்கு நீங்கள் அனுமதிக்கப்படுகின்றீர்கள். போஸ்ரர்வர்ணம், பஸ்ரல்வர்ணம், நீர்வர்ணம் போன்ற பொருத்தமான ஊடகம்.

**“அ” பகுதி அல்லது “ஆ” பகுதி அல்லது “இ” பகுதியில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுக..**

**பகுதி “அ”- கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம்**

1. ஆலயத்தில் வழிபடும் பக்தர்கள்
2. பிரியமான சம்பாஷனை ஒன்று
3. கிராமிய விளையாட்டொன்றின் உள்ளங்கவர்ந்த சந்தர்ப்பம்.
4. சுதந்திரமாக திரியும் காட்டு மிருகங்கள்

**பகுதி “ஆ”- அலங்காரச்சித்திரம்**

1. பாரம்பரிய அலங்காரக் காட்டுருக்களைப் பயன்படுத்தி வட்டவடிவமான தட்டு ஒன்றினை வரைவோம்.
2. பிராணிகளின் வடிவங்களைக் பயன்படுத்தி சீத்தைத்துணி ஒன்றிற்கான அலங்காரம் ஒன்றினை வரைவோம்.
3. மின்விளக்கின் உறை ஒன்றினை வரைவோம். (Lamp shades)
4. நவீன அலங்கார இயல்புகள் வெளிப்படும் விதத்தில் விரிந்த குடைக்கான அலங்காரத்தை ஆக்குவோம்.

**பகுதி “இ”- கிரபிக்சித்திரம்**

1. புதிதாக அமைக்கப்பட்ட வங்கி ஒன்றிற்காக இலட்சனை ஒன்றினை வடிவமைக்குக.
2. போதைப்பொருள் தாக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சுவரொட்டி ஒன்றினை வடிவமைக்குக.
3. மென்பானப் போத்தல் ஒன்றிற்கான விளம்பரம் செய்யும் வகையில் மேலுறை ஒன்றை அமைக்குக.
4. சித்திரைப் புத்தாண்டிற்கான வாழ்த்துமடல் ஒன்றினை நிர்மாணிக்குக.

(30 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
### சித்திரக்கலை – 2019

தரம் 10 2ம் தவணை

**பகுதி - I விடைகள்**

1. மல்யுத்த வீரர்கள்
2. எம்பக்கே
3. தெல்மட மூலாச்சாரியார்
4. சிறுபுடைப்பு
5. மடோல் குரும்பாவ
6. துப்பாக்கி
7. திராட்சைக்குலை
8. கரும்சிவப்பு
9. ஸ்பிங்ஸ்
10. தங்கம், யானைத்தந்தம்
11. ஸ்தபதிராயர்
12. பொப்ளர் மரப்பலகை
13. கிரேக்கம்
14. ர.ஃபேயல் சென்சியோ
15. தெகல்தொறுவ
16. C
17. D
18. E
19. A
20. B
21. பியேட்டா

Education கல்வி අධ්‍යාපන

22. கருங்கல்

23. தெய்வேந்திர மூலாச்சாரியார்

24. களிமண்

25. வீனஸ்

26. எகிப்திய நாகரீகத்தின் எழுத்துவடிவம்

27. பலவர்ணங்களில் பல பிரதிகள் எடுக்கும் முறையாகும். எம்.சார்லிஸ் இவ் அச்சுப்பதிப்பில் பௌத்த சமய படங்களை பிரதி செய்தார்.

28. தரையில் அமர்ந்து ஏதோ ஒன்றினை எழுதுவது போல் காணப்படும் எகிப்திய நாகரிக சுண்ணாம்புக்கற் சிற்பம் ஆகும்.

29. கண்டிநகர்க்கால ஓவியங்கள் ஜாதகக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்கதை ஓவியங்களாக விகாரைகளில் வரையப்பட்டுள்ளன.

30. சிற்பங்கள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் ஊடகமாகும். மைக்கல் அஞ்சலோ இவ்வூடகத்தைப் பயன்படுத்தி அதிகளவு சிற்பங்களைப் படைத்துள்ளார்.

31. சுண்ணாம்புக்கல்

32. மைக்கல் அஞ்சலோ

33. கண்டி

34. பயம், வேதனை

35. மெம்பிட்ட விகாரை (மெதவெல)

36. மாரா யுத்தம்

37. ஜோஜ்கீற்

38. கோதமி விகாரை

39. சாம்பல், கறுப்பு, மஞ்சள், மெல்லிய மண்ணிறம் போன்ற வர்ணங்கள்

40. விசித்திரமான கேத்திர கணித வடிவங்களைப் பயன்படுத்தி யுத்தப் படையினரின் பயங்கரமான சுபாவத்தைத் திறமையாகவும், இரேகைகளின் தன்மையைப் போலவே முப்பரிமாணத்தைக் காட்ட வர்ணத்தை பிரயோகித்த விதமும் அவருக்கே உரியபாணியில் காட்டி ஒழுங்கமைத்துள்ளார்.

Education கல்வி අධ්‍යාපන

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**